# க.பொ.த (சா.தரம்) உதவிக் கருத்தரங்கு - 2013

## வரலாறு I

ஒரு மணித்தியாலம்

**கவனிக்குக :**

* **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.** இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்
* **1** தொடக்கம் **40** வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள (1), (2), (3), (4) என்ற விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத்** தெரிவு செய்க.

**1.** இலங்கையின் வரலாற்றைக் கற்க உதவும் இலக்கிய மூலாதாரங்களிலே மகாவம்சம் ஒரு முக்கிய இடத்தைப் பெறுவதற்கான பிரதான காரணம்,

(1) ஏனைய வம்சக்கதைகளில் உள்ள குறைபாடுகள் நீக்கப்பட்டு எழுதப்பட்டுள்ளமை.

(2) அதுவரை காலமும் நிலவி வந்த அட்டகதா, அறநூல்கள் ஆகியவற்றின் துணையுடன் ஆக்கப்பட்டமை.

(3) தொடர்ச்சியான வரலாற்றினைக் கட்டியெழுப்பக் கூடியதாயுள்ளமை.

(4) முக்கியமாகச் சமய வரலாற்றைக் கற்க உதவுகின்றமை.

**2.** இந்தியாவிற்குள் வந்த ஆரியர்கள் தென் இந்தியாவிற்குப் புலம்பெயரும்போது கடக்க நேரிட்ட மலைத்தொடர்,

(1) இமாலயம் (2) விந்திய (3) இந்துகுஷ் (4) சத்புரா

**3.** இலங்கை வரலாற்றினைக் கற்பதற்கு வெளிநாட்டவரின் நூல்கள் அறிக்கைகள் என்பன பெருந்துணை புரிகின்றன. இந்நூல்களிடையே இலங்கையை "பார சமுத்திரம்" எனக் குறிப்பிடுவது எது?

(1) பிளினியின் 'நெச்சுராலிஸ் ஹிஸ்டோரியா' (2) மெகஸ்தனீஸின் 'இண்டிகா'

(3) அரிஸ்டோட்டிலின் 'டிமுண்டோ' (4) கௌடில்யரின் 'அர்த்தசாஸ்திரம்'

**4.** பின்வரும் இடங்களிடையே வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து இடுகாடுகள் காணப்படும் இடங்களாவன

(1) கித்துல்கல பெலிலெனா, இராவணன் அல்ல குகை (2) இப்பன்கடுவ, பொம்மரிப்பு

(3) தந்திரிமலை, பெல்லன்பதி பெல்லச (4) பாகியன்கல குகை, தொரவாக்க குகை

**5.** அலகபாத் தூண் கல்வெட்டினையும் அலகபாத் பிரஷஸ்தியையும் அமைப்பதற்கு ஆதரவு அளித்த மன்னர்கள் முறையே,

(1) அசோகன், சமுத்திர குப்தன் (2) சந்திரகுப்த மௌரியன், முதலாம் சந்திர குப்தன்

(3) சமுத்திர குப்தன், இரண்டாம் சந்திர குப்தன் (4) அசோகன், சந்திர குப்த மௌரியன்

**6.** பின்வருவனவற்றுள் வலகம்பா மன்னன் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற வரலாற்று நிகழ்வுகளைக் கொண்ட விடை,

A - தென்னிந்தியர் ஏழு பேரைக்கொண்ட குழுவினரின் ஆக்கிரமிப்பு

B - ஜேத்தவனராம விகாரை கட்டப்பட்டமை

C - தீய என்னும் பிராமணனின் கிளர்ச்சி

D - முதலாவது தனிப்பட்ட விகாரை அர்ப்பணம்

E - மேகவர்ணாபய அமைச்சரின் கிளர்ச்சி

(1) A C D (2) B D E (3) A B C (4) C D E

[பக் 2 ஐப் பார்க்க

**7.** குளத்திலிருந்து கலிங்கல் ஊடாக பிரதான கால்வாய்க்கு நீரை வழங்குவதற்கு புராதன நீர்ப்பாசன தொழினுட்பவியலாளரால் நீரின் அமுக்கத்தைப் பேணுவதற்கு ஆக்கப்பட்ட பண்டைய உயர் தொழினுட்ப நிர்மாணம்,

(1) அலைதாங்கி (2) வான் கதவு (3) கலிங்கல் தொட்டி (4) உள்வான் கதவு

**8.** பின்வரும் X, Y என்னும் நிரல்களில் நீர்வள நாகரிக காலத்தில் அமைக்கப்பட்ட குளங்களும் அவற்றைக் கட்டிய மன்னர்களின் பெயர்களும் தரப்பட்டுள்ளன. X நிரலிலுள்ள குளங்களுடன் Y நிரலிலுள்ள மன்னர்களை இணைக்கும்போது வரும் சரியான விடை

| நிரல் "X" | | நிரல் "Y" |
|---|---|---|
| (i) | அபயவாவி | A - இரண்டாம் முகலன் |
| (ii) | கலாவாவி | B - வசபன் |
| (iii) | பத்பஹறன் குளம் | C - பண்டுகாபயன் |
| (iv) | கிரித்தலே வாவி | D - தேவநம்பியதீசன் |
| (v) | மகாவிலச்சிய குளம் | E - இரண்டாம் அக்போ |
| | | F - தாதுசேனன் |

(1) C D A B F (2) D B C E A (3) C F A E B (4) D F E A B

**9.** கால்வாய் அமைப்பு நுட்பத்தின் சிறப்பினை எடுத்துக்காட்டும் ஆற்றுப் பள்ளத்தாக்குகளுக்கிடையிலான கால்வாய் அமைப்புக்கு சிறந்த உதாரணமாக விளங்குவது,

(1) யோத கால்வாய் (2) மினிப்பே கால்வாய்
(3) பப்பதென்ன கால்வாய் (4) ரிதிபெண்டி கால்வாய்

**10.** பின்வருவனவற்றுள் பொலன்னறுவைக் கால கட்டட நிர்மாணங்களில் அடிப்படையில் செல்வாக்குச் செலுத்திய கலை மரபு,

(1) மௌரிய (2) குப்தர் (3) பல்லவ (4) சோழர்

**11.** கோட்டை காலத்தில் மொழிவளர்ச்சிக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் கல்வி விருத்திக்கும் உதவிய கல்வி நிறுவனங்கள் 'X' நிரலிலும் அவை அமைந்திருந்த இடங்கள் 'Y' நிரலிலும் தரப்பட்டுள்ளன. இரு நிரல்களையும் சரியாக இணைக்கும் போது வரும் விடை,

| நிரல் "X" | | நிரல் "Y" |
|---|---|---|
| (i) | விஜயபா பிரிவேனா | A - கேரகல |
| (ii) | பத்மாவதி பிரிவேனா | B - தொட்டகமுவ |
| (iii) | சுனேத்ராதேவி பிரிவேனா | C - பெப்பிலியான |
| (iv) | இருகல் குலதிலக்க பிரிவேனா | D - தெவிநுவர |

(1) D B CA (2) B C D A (3) B A C D (4) D C A B

**12.** 6ஆம் பராக்கிரமபாகு மன்னனின் கீழ் சப்புமல்குமார இளவரசன் யாழ்ப்பாண இராச்சியத்தை, கோட்டை இராச்சியத்துடன் இணைத்துக்கொண்ட போது, யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னன்,

(1) விஜய கூழங்கை (2) விக்கரமசிங்க (3) வரோதயன் (4) கனக சூரியசிங்கன்

**13.** இஸ்லாமிய ஆட்சியின் பரவலுக்கு **பொருந்தாத** கூற்றைத் தெரிவு செய்க.

(1) இஸ்லாமிய சமயத்தின் தாபகராகக் கருதப்படுபவர் முகம்மது நபிகள் ஆவார்.
(2) முகம்மது கஸ்னி இந்தியாவிலுள்ள சோமநாதர் ஆலயத்தை அழித்து அங்குள்ள பொருட்களைக் கொள்ளையடித்தான்.
(3) மாமன்னர் அக்பர் இந்தியா முழுவதும் தனது ஆட்சியின் செல்வாக்கினைப் பரப்பினார்
(4) அடிமை வம்சத்தைச் சேர்ந்த குத்துப்புதீன் ஐபெக் டில்லி சுல்தானிய சாம்ராச்சியத்தை ஆரம்பித்தார்.

[பக் 3 ஐப் பார்க்க

**14.** மாமன்னன் அசோகனுக்குப் பின்பு இந்தியாவில் சமய சகிப்புத்தன்மை கொள்கையைக் கடைப்பிடித்தமையினால் மேன்மையான ஆட்சியாளராக மதிக்கப்படும் மன்னர்

(1) மாமன்னர் அக்பர்
(2) முகம்மது பின் காசிம்
(3) கோரி முகம்மது
(4) அலாவுதீன் கல்ஜி

**15.** அல் ஹஜ்ஜாஜ், இல்துத்மிஷ், ஹஜ் - உத் - தீன் பீருஷ்ஷா, கிருஷ்ண தேவராயர் ஆகிய மன்னர்கள் முறையே ஆட்சி செய்த பிரதேசங்களைக் கொண்ட விடை,

(1) டில்லி சுல்தான், ஈராக், விஜய நகர், பாமினி
(2) ஈராக், டில்லி சுல்தான், பாமினி, விஜய நகர்
(3) பாமினி, ஈராக், விஜய நகர், டில்லி சுல்தான்,
(4) ஈராக், பாமினி, டில்லி சுல்தான், விஜய நகர்

**16.** எந்த நகரத்தைக் கைப்பற்றுவதற்காக கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் சிலுவை யுத்தங்கள் நடைபெற்றன.

(1) ஜெருசலம்
(2) ரோமாபுரி
(3) கொன்ஸ்தாந்திநோப்பிள்
(4) புளோரன்ஸ்

**17.** ஐரோப்பாவின் மறுமலர்ச்சி காலத்தில் எழுந்த கலையாக்கங்களில் அவதானிக்கக் கூடிய சிறப்பம்சம்,

(1) சமயம் சார் அம்சங்களைக் கொண்டிருந்தமை
(2) உலகியல் தன்மைகளைச் சார்ந்திருந்தமை
(3) அரசுகளின் ஆதரவுடன் தோன்றியமை
(4) கூட்டிணைவுடன் ஆக்கப்பட்டமை

**18.** பல்வேறு நுட்பங்களைப் பயன்படுத்தி ஐரோப்பியர் தமது ஆதிக்கத்தினை ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா போன்ற கண்டங்களில் பரப்பினர். மிகக் கொடூரமான முறையிலும் மனிதாபிமானமற்ற விதத்திலும் இச்செயற்பாட்டினைச் செய்தவர்கள்

(1) ஸ்பெயின் நாட்டினர்
(2) போர்த்துக்கேயர்
(3) பிரித்தானியர்
(4) ஒல்லாந்தர்

**19.** பின்வருவனவற்றிலிருந்து இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சி தொடர்பான கூற்றுகளைத் தெரிவு செய்க.

A - போர்த்துக்கேயர், முஸ்லிம்களுக்கு எதிரான மிகத்தீவிரமான கொள்கையைப் பின்பற்றினர்.
B - வர்த்தக ரீதியில் போர்த்துக்கேயர் கறுவா பயிர்செய்கையை ஆரம்பித்ததுடன் பொருட்களை கால்வாய்கள் மூலமாக கொண்டுசெல்வதில் கவனம் செலுத்தினர்.
C - கரையோர மக்களை கத்தோலிக்க சமயத்திற்கு மதம் மாற்றம் செய்வதின் மூலமாக மக்களின் ஆதரவினைப் பெற முயற்சி செய்தனர்.
D - கொரில்லா யுத்த முறையினைப் பயன்படுத்தி மக்களை அடக்குகின்ற திறன்களைப் பெற்றிருந்தனர்.

(1) A B    (2) B C    (3) C D    (4) A C

**20.** இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற யுத்தங்கள் கீழே A, B, C, D யில் தரப்பட்டுள்ளன. இந்த யுத்தங்களுக்கு தலைமை தாங்கிய போர்த்துக்கேய தளபதிகளின் சரியான ஒழுங்கை குறிக்கும் விடை

A - முல்லேரியா யுத்தம்
B - தந்துரே யுத்தம்
C - பலன யுத்தம்
D - ரன்தெனிவெல யுத்தம்

(1) பெரோ லோபஸ் த சூசா, தியாகோ த மெல்லோ, பெரெய்ரா த லஸர்தா, கொன்ஸ்டன்டைன் த சா
(2) பெரெய்ரா த லஸர்தா, பெரோ லோபஸ் த சூசா, ஜெரனிமோ த அசுவிடோ, தியாகோ த மெல்லோ
(3) பெரோ லோபஸ் த சூசா, பெரெய்ரா த லஸர்தா, கொன்ஸ்டன்டைன் த சா, ஜெரனிமோ த அசுவிடோ
(4) பெரெய்ரா த லஸர்தா, பெரோ லோபஸ் த சூசா, ஜெரனிமோ த அசுவிடோ, கொன்ஸ்டன்டைன் த சா

**21.** ஒல்லாந்தருக்கும் கண்டி மன்னர்களுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களில் காணப்பட்ட நிபந்தனைகள் A , B, C, D யில் தரப்பட்டுள்ளன. இவற்றுள் கி.பி. 1638 ஆண்டு ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்ட விடையினைத் தெரிவு செய்க.

A - போர்த்துக்கேயரை விரட்டியடிப்பதற்கு, கண்டி மன்னனுக்கு ஒல்லாந்தர் உதவ வேண்டும்.

B - கடற்கரையில் 4 மைல் (ஒரு கவ்வ) அகலப் பிரதேசம் ஒல்லாந்தரிடம் கையளிக்கப்பட வேண்டும்

C - மலைநாட்டு வர்த்தகத்திற்கும், கறுவா புடைத்தலுக்கும், மரங்களை வெட்டிக் கொள்வதற்கும், ஒல்லாந்தருக்கு கண்டி மன்னன் அனுமதியளிக்க வேண்டும்

D - யுத்தத்திற்கான சகல செலவுகளையும் கண்டி மன்னன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(1) A B (2) B C (3) C D (4) A D

**22.** மனிதன் மேலானவன் என்பதனைக் கவனத்திற் கொண்டு உலகின் எப்புரட்சி சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் கருப்பொருள்களின் அடிப்படையில் உருவாகியது.

(1) ஆங்கில புரட்சி (2) பிரான்சிய புரட்சி (3) ரஷ்யப் புரட்சி (4) சீனப் புரட்சி

**23.** ஜேர்மனியை ஐக்கியப்படுத்தும் பணிக்கான முன்னோடி நடவடிக்கை யாரால் மேற்கொள்ளப்பட்டது.

(1) நெப்போலியன் போனபாட் (2) ஒட்டோவான் பிஸ்மார்க்

(3) கவுன்ட் கவூர் (4) விளாடிமிர் லெனின்

**24.** கைத்தொழிற் புரட்சியினால் மனிதனுக்கு நன்மையான விளைவுகளும், தீமையான விளைவுகளும் ஏற்பட்டன. பின்வருவனவற்றுள் தீமையான விளைவுகளைக் கொண்ட விடையினைத் தெரிவு செய்க.

A - யுத்த நடவடிக்கைகளில் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தல்

B - கைத்தொழில் கழிவுகள் சூழலுக்கு அகற்றப்பட்டமை

C - சமூக ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்தமை

D - இளைஞர்கள் போதை பொருட்களுக்கு அடிமையாதல்

(1) A B (2) B C (3) C D (4) A D

**25.** வாக்குரிமை மூலம் மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் ஜனநாயக முறையினை இலங்கை மக்களுக்கு முதன்முறையாக அறிமுகப்படுத்திய யாப்பு எது?

(1) கோல்புறூக் (2) மக்கலம் (3) டொனமூர் (4) சோல்பரி

**26.** பிரித்தானியர் பெருந்தோட்டப் பயிர்செய்கையை அறிமுகப்படுத்தியதினால் கண்டி பிரதேச மக்கள் எதிர்நோக்கிய மிகத் தீவிரமான பிரச்சினை எது?

(1) தென்னிந்தியரை தொழிலாளர்களாக பெருந்தோட்டங்களில் வேலைக்கு அமர்த்துதல்

(2) பெருந்தோட்டங்கள் அமைப்பதற்கு காடுகள் அழிக்கப்பட்டமையினால் மண்ணரிப்பு உருவாதல்

(3) தரிசு நிலச் சட்டத்தின் மூலம் நிலங்கள் சுவீகரிக்கப்பட்டதனால் பயிர்செய் நிலங்கள் குறைவடைந்தமை

(4) கண்டி பிரதேசத்தில் நிலவிய சமூக கலாசார விழுமியங்கள் சீரழிதல்

**27.** கோல்புறூக்கின் சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக கிராமங்களின் பொது வேலைகளும் விவசாயத்துக்கான நீர்ப்பாசன செயற்பாடுகளும் கவனியாது விடப்பட்டன. இதன் காரணமாக கிராமத்தின் பொது நலன்களும், விவசாய நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டன. இவ்விடயத்தில் செல்வாக்குச் செலுத்திய சீர்திருத்தம்.

(1) இதுவரை காணப்பட்ட பதினாறு மாகாணங்களை ஐந்தாகக் குறைத்தல்

(2) இராஜகாரிய முறையினை ஒழித்து, கம்சபாவின் அதிகாரத்தைக் குறைத்தல்

(3) வெளிநாட்டு வர்த்தகர்களுக்கு உள்நாட்டில் காணி வாங்கும் உரிமை வழங்கல்

(4) நீதிமன்ற முறைமையினை ஏற்படுத்தி எல்லா வழக்குளையும் அவற்றுக்கு ஒப்படைத்தல்

[பக் 5 ஐப் பார்க்க

**28.** பிரித்தானியர் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட யாப்புச் சீர்திருத்தங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. இவற்றுள் டொனமூர் யாப்புக்கு உரிய சீர்திருத்தங்களைத் தெரிவு செய்க.

A - சட்டவாக்க கழகம் தாபிக்கப்பட்டமை

B - சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமை

C - நிர்வாகக் குழு முறை ஆரம்பிக்கப்பட்டமை

D - விகிதாசார பிரதிநிதித்துவ முறை ஏற்படுத்தப்பட்டமை

(1) B C (2) C D (3) C E (4) B D

**29.** பின்வருவனவற்றுள் 1818ம் ஆண்டு சுதந்திரப்போராட்டத்துக்குக் காரணமான விடயங்களைக் கொண்ட விடை

A - கண்களுக்கு புலப்படாத மன்னனினால் ஆட்சி செய்யப்பட்டதினால் ஏற்பட்ட வெறுப்பு

B - புரன் அப்பு கலகத்துக்கு தலைமை வகித்தமை

C - நியாயமற்ற வரிக் கொள்கையை பின்பற்றுதல்

D - கண்டிப் பிரதானிகள் தாம் அனுபவித்து வந்த சலுகைகளையும் கௌரவத்தையும் இழந்தமை

(1) AB (2) B C (3) C D (4) A D

**30.** நடேச ஐயர், ஏ.ஈ. குணசிங்க ஆகிய தலைவர்கள் இருவருக்கும் பொருந்தக்கூடிய கூற்றினை கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்க.

(1) நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னோடிகளாக விளங்குதல்

(2) கலாசார மறுமலர்ச்சிக்கு தலைமைத்துவம் வழங்குதல்

(3) தொழிலாளர்கள் தொழில் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்குச் செயலாற்றுதல்

(4) உள்நாட்டு விவசாயம் எழுச்சி பெறுவதற்கு மக்களுக்கு உணர்வூட்டுதல்

**31.** இந்தியா சுதந்திரம் பெறுவதற்காக 'கல்கத்தாவில் தோன்றிய இந்தியர் சங்கத்தை' உருவாக்கிய இந்தியத் தலைவர்

(1) சுரேந்திரநாத் பானர்ஜி (2) அலன் ஒக்டேவியன் ஹியும்

(3) மகாத்மா காந்தி (4) சுபாஸ் சந்திர போஸ்

**32.** 'இந்தியாவின் புராதன பெருமையை வெளிப்படுத்தியதின் மூலம் இந்தியர்களிடையே தேசிய விழிப்புணர்ச்சி தோன்றியது.' இவ்விழிப்புணர்ச்சிக்காக முன்னின்ற தொல்பொருள் ஆய்வாளர்கள் மட்டும் அடங்கியுள்ள விடை,

(1) மெக்ஸ் முலர், ஜோன் மார்ஷல், மோதிலால் நேரு

(2) மெக்ஸ் முலர், மகாத்மா காந்தி, லாலா லஜ்பதி ராய்

(3) மோத்திமர் வீலர், ஜவஹலால் நேரு, மகாத்மா காந்தி

(4) ஜோன் மார்ஷல், மெக்ஸ் முலர், மோத்திமர் வீலர்

**33.** யப்பானில் டொகுகாவா ஷோகுன்களின் ஆட்சிக்கு **பொருந்தாத** கூற்றினை தெரிவு செய்க.

(1) சமூகத்தில் சமுராய்கள் தமது அந்தஸ்தை இழந்தனர்.

(2) விவசாயிகள் யுத்த ஆயுதங்கள் தரித்தலிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

(3) சமூகத்தில் தாழ்மட்டத்திலிருந்த டேமியோக்கல் ஆட்சியாளர்களாகினர்.

(4) விவசாயத்தை கவனியாது விட்டதினால் அறுவடை குறைவடைந்தது.

**34.** அடிப்படைக் கொள்கைகளான 'தேசியவாதம், ஜனநாயகம், உழைப்பு' ஆகியவற்றை உள்ளடக்கியது

(1) மா-ஓ-சேதுங்கின் சிந்தனையின் அடிப்படையில் உருவான கொம்யூனிஸ் கட்சியின் தத்துவமாகும்

(2) சங்-யாத்-சென்னின் சிந்தனையின் அடிப்படையில் உருவான கோமிங்டாங் கட்சியின் தத்துவமாகும்

(3) சியங்-காய்-செக்கின் சிந்தனையின் அடிப்படையில் உருவான கோமிங்டாங் கட்சியின் தத்துவமாகும்

(4) மைக்கல் பரோடிங்கின் சிந்தனையின் அடிப்படையில் உருவான சோவியத் கொம்யூனிஸ் கட்சியின் தத்துவமாகும்.

[பக் 6 ஐப் பார்க்க

**35.** "இலட்சக் கணக்கானோர் புரட்சியிலீடுபடும்போது அது ஒரு புயலாகவோ சூறாவளியாகவோ மாறலாம்." என மாஓ சேதுங் கூறியதிலிருந்து வெளியாகும் கருத்து,

(1) புரட்சியின் போது புயலும், சூறாவளியும் உருவாகலாம்.

(2) புரட்சியின் போது மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு உட்படலாம்.

(3) புரட்சியின் போது பெருந்தொகையான மக்கள் இறக்க நேரிடலாம்.

(4) புரட்சியின் போது லட்சக்கணக்கான மக்கள் பங்குபெறக் கூடாது.

**36.** இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட மார்ஷல் திட்டத்தின் முக்கிய நோக்கம்

(1) யுத்தத்தின் போது சீரழிந்த ஐரோப்பிய சந்தைகளை மீட்டெடுப்பது

(2) யுத்தத்தினால் அழிந்த ஐரோப்பிய நாடுகளுக்கு பொருளாதார உதவி வழங்குதல்

(3) யுத்தங்கள் மீண்டும் ஏற்படாத விதத்தில் அமைதியான சூழலை உருவாக்குதல்

(4) சோவியத் அணி நாடுகளின் இராணுவ பலத்தைக் கட்டுப்படுத்தல்

**37.** இரண்டாம் உலக யுத்தத்தின் போது 'எஸ். எஸ்.' எனும் ஒரு இரகசிய இராணுவத்தையும் 'கெஸ்டபோ' எனப்படும் இரகசிய பொலிஸ்பிரிவையும் வைத்திருந்த ஜேர்மனிய தலைவர்

(1) ஒட்டோவான் பிஸ்மார்க்
(2) இரண்டாம் கைசர் வில்லியம்
(3) ஒடொல்ப் ஹிட்லர்
(4) பெனிடோ முசோலினி

**38.** இலங்கையில் நடைமுறையிலிருந்த சில யாப்புகளின் முக்கிய பண்புகள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றுள் 1972 முதலாம் குடியரசு யாப்பின் பண்புகளைக் கொண்ட விடையினை தெரிவு செய்க.

A - பௌத்தம் நாட்டின் சமயமாக பிரகடனப்படுத்தப்படல்.

B - விகிதாசார பிரதிநிதித்துவ முறை அறிமுகப்படுத்தப்படல்.

C - இதுவரை 'லங்கா' எனும் பெயரால் அழைக்கப்பட்ட இலங்கை 'ஶ்ரீ லங்கா' என அழைக்கப்படுதல்

D - மக்கள் இறைமை நிலைநாட்டப்படல்.

E - நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்தல்

(1) A B D (2) B C E (3) A C D (4) C D E

**39.** இரண்டாம் உலக மகாயுத்தத்திற்குப் பின்பு உருவான இரு வல்லரசு முகாம்களின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டு, நாடுகளின் சுயாதீனத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அமைக்கப்பட்ட அணிசாரா நாடுகளின் அமைப்பினது முன்னோடித் தலைவர்களை மட்டும் உள்ளடக்கிய விடை,

(1) ஜவஹர்லால் நேரு, மார்ஷல் டிடோ, அப்துல் கமால் நஸார், சுகார்ணோ

(2) வின்ஸ்டன் சேர்ச்சில், முகம்மது அலி ஜின்னா, பிரங்லின் ரூஸ்வெல்ட், சுகார்ணோ

(3) அப்துல் கமால் நஸார், ஜவஹர்லால் நேரு, பிடல் கஸ்ரோ, சால்ஸ் டீ கோல்

(4) பிரங்லின் ரூஸ்வெல்ட், மார்ஷல் டிடோ, சுகார்ணோ, முகம்மது அல் கடாபி

**40.** பிரித்தானிய குடியேற்ற நாடுகளாக இருந்து பின்னர் சுதந்திரம் பெற்ற நாடுகள் நட்புறவைப் பேணிக்கொள்வதற்காக உருவாக்கிய சர்வதேச அமைப்பு,

(1) பொதுநலவாய அமைப்பு

(2) சார்க் அமைப்பு

(3) வோர்ஸோ அமைப்பு

(4) வட அத்லாந்திக் நாடுகளின் ஒப்பந்த அமைப்பு (N A T O)

* * *

# க.பொ.த (சா.தரம்) உதவிக் கருத்தரங்கு - 2013

| வரலாறு II | மூன்று மணித்தியாலம் |
|---|---|

கவனிக்க :
* I ஆம் பகுதியில் **முதலாம்** வினா கட்டாய வினாவாகும்
* II ஆம் பகுதியில் **மூன்று** வினாக்களுக்கும், III ஆம் பகுதியில் **இரண்டு** வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

**1.** (அ) கீழே (i) இன் கீழ் தரப்பட்டுள்ள வரலாற்று இடங்கள் **அனைத்தையும்** தரப்பட்டுள்ள **இலங்கைத்** தேசப்படத்திலும் (ii) இன் கீழே தரப்பட்டுள்ள வரலாற்று இடங்கள் **அனைத்தையும்** தரப்பட்டுள்ள ஒரு பகுதி **உலகத்** தேசப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.

(i) கங்காசிறிபுர, மின்னேரியா வாவி, அங்கமெடில்லா அணைக்கட்டு, ரிதிகல, கோட்டை, பொம்மரிப்பு, ஊராதோட்டை, கச்சரகாமம், தேவநகர், கால்கா நதி (10 புள்ளிகள்)

(ii) கிருஷ்ணா நதி, சுப்பாரகம், நாகசாகி, தாய்வான், யாவா தீவு, பாரசீக விரிகுடா, வெனிஸ், லிஸ்பன் (08 புள்ளிகள்)


(ஆ) (i) கீழே A B C D யில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு வரலாற்று நிகழ்வுடனும் தொடர்புடைய இடங்களை ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A - டிகிரி பண்டார இளவரசன் (1ம் இராஜசிங்க மன்னன்) போர்த்துக்கேயரை படுதோல்வி அடையச் செய்த இடம்.

B - கி.பி. 1453 இல் ஒட்டமன் துருக்கியர் கைப்பற்றிக் கொண்ட கிழக்கு உரோம சாம்ராச்சியத்துக்கு உரிய நகரம்.

C - தந்த இளவரசனும் ஹேமமாலா இளவரசியும் புனித தந்ததாதுவை கொண்டு இலங்கையில் வந்திறங்கிய துறைமுகம்.

D - இலங்கையில் பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ சமயத்தவர்கள் அனைவரும் நல்லிணக்கத்துடன் வணக்க வழிபாடுகள் செய்யும் புனித வழிபாட்டிடம் (04 புள்ளிகள்)




(ii) 1. இப்படத்தில் காட்டப்பட்டவரின் பெயர் யாது?

2. இவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

3. இவருடைய முயற்சியினால் இலங்கையில் அமைக்கப்பட்ட சபையின் பெயர் யாது?

4. இவருடைய தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டு பாடசாலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)



(iii) 1. இப்படத்தில் காட்டப்பட்டவரின் பெயர் யாது?

2. இவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

3. இவருடைய தலைமைத்துவத்தால் நவீன உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட ஆக்கம் யாது?

4. விஞ்ஞானத் துறைக்குச் செய்த சேவையின் காரணமாக இவருக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பெயர் யாது?


(04 புள்ளிகள்)

[பக் 2 ஐப் பார்க்க

# பகுதி II

**2.** (i) இலங்கையில் இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்தோர் வருவதற்கு முன்பு மூன்று வகையான இனக்குழுக்கள் வாழ்ந்ததாக இலக்கிய மூலாதாரங்களும், நாட்டார் கதைகளும் (Folk lore) குறிப்பிடுகின்றன. **இம்மூன்று** இனக்குழுக்களின் பெயர்களையும் எழுதுக. (03 புள்ளிகள்)

(ii) இந்தியப்புலம்பெயர்வாளர் தமது குடியிருப்புகளை அமைப்பதற்குப் பயன்படுத்திய நதிக் கரையோங்கள் A, B, C, D எனப் படத்தில் காட்டப்பட்டுள்ளன. அந்நதிகளின் பெயர்களை ஒழுங்கு முறையாக எழுதுக. (04 புள்ளிகள்)




(iii) ஆரம்பத்தில் குடியேறிய ஆரியர்களின் வாழ்வாதார தொழில்களின் முக்கிய பண்புகள் **இரண்டினை** விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) பிற்காலத்தில் ஆரியர்கள் நீர்ப்பாசனத் திட்டங்களை ஆரம்பித்தமைக்கான காரணங்கள் **மூன்றினை** விளக்குக. (06 புள்ளிகள்)

**3.** (i) கீழே A, B, C உருக்களில் காட்டப்பட்டுள்ள கலையம்சங்களை அவதானித்து ஒழுங்குமுறையில் அவற்றின் பெயர்களை உங்கள் விடைத்தாளில் எழுதுக.



உரு: A



உரு: B



உரு: C

(03 புள்ளிகள்)

(ii) நீர்ப்பாசனத் தொழினுட்ப நிர்மாணங்கள் P, Q, R, S யில் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நிர்மாணங்கள் ஒவ்வொன்றினதும் ஒவ்வொரு தொழிற்பாட்டினைக் குறிப்பிடுக.

P - வான் கதவு  Q - கலிங்கல் தொட்டி
R - கலிங்கற்கட்டு  S - சிறு குளங்கள் (04 புள்ளிகள்)

(iii) இலங்கையில் உண்டான சமய கலாசார மறுமலர்ச்சியில் பௌத்த சமயத்தின் செல்வாக்கினை **இரு** விடயங்கள் மூலமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) கலிங்க மாகனின் ஆக்கிரமிப்புக்கு பின்பு பொலன்னறுவையைத் திரும்பவும் ஒரு பலம் வாய்ந்த இராச்சியமாக கட்டியெழுப்ப முடியாமல் போனமைக்கான காரணங்கள் **இரண்டினை** விளக்குக. (06 புள்ளிகள்)

**4.** (i) மயுர சந்தேசய, குத்தில காவிய, திசர சந்தேசய, செலலிகினி சந்தேசய, எலு அத்தனகலு வன்ச, பரவி சந்தேசய ஆகிய இலக்கியங்களில் கோட்டைக் காலத்துக்கு உரிய ஆக்கங்களை மட்டும் எழுதுக. (03 புள்ளிகள்)

(ii) 6ஆம் பராக்கிரமபாகுவின் காலத்தில் கோட்டை இராச்சியத்தில் நடைபெற்ற **இரு** முக்கிய அரசியல் நிகழ்வுகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) இராசதானிகள் தென்மேற்காக இடம் பெயர்ந்த போது மக்கள் தமது பொருளாதார நடவடிக்கைகளை பௌதிகச் சூழல் பண்புகளுக்கு ஏற்ப மாற்றிக் கொண்டனர். இதனை **இரண்டு** விடயங்கள் மூலம் விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) அரசர்களின் செயற்பாடுகள் காரணமாக கோட்டை இராச்சியம் உறுதியற்றுக் காணப்பட்டது. இதனை **இரு** அரசியல் நிகழ்வுகளை ஆதாரமாகக் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)

[பக் 3 ஐப் பார்க்க

**5.** (i) கி.பி. 1521 இல் உண்டான ‘விஜயபாகு கொள்ளை’ க்கு பின்பு அரசியல் ரீதியில் பிளவுபட்ட கோட்டை, றைகம, சீதாவக்கை இராச்சியங்களின் ஆட்சியாளர்களின் பெயர்களை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.
(03 புள்ளிகள்)

(ii) A, B, C, D இல் குறிப்பிடப்பட்ட வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடையவர்களின் பெயர்களை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

A - முதலாம் இராஜசிங்க மன்னன் மலையக இராச்சியத்தை ஆக்கிரமித்த போது போர்த்துக்கேயரிடம் தஞ்சம் புகுந்த கண்டி மன்னன்

B - முதலாம் விமலதர்மசூரியன் மன்னனுக்கும், செனரத் மன்னனுக்கும் மனைவியாக இருந்த இளவரசி

C - கி.பி. 1766 இல் ஒல்லாந்தருடன் செய்துகொண்ட உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட கண்டி மன்னன்.


D - பிரித்தானியர்களால் மலையகத்தை பரிபாலனம் செய்வதற்கு நியமிக்கப்பட்ட ‘ஸ்தானீகர்’ (பிரதிநிதி / resident)


(04 புள்ளிகள்)

(iii) முதலாம் விமலதர்மசூரிய மன்னனால் மலையக இராச்சியத்தில் செய்யப்பட்ட அரசியல், சமய சேவைகளை முறையே ஒவ்வொரு உதாரணம் தந்து விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) போர்த்துக்கேயராலும், ஒல்லாந்தராலும் கைப்பற்ற முடியாமல் போன மலையக இராச்சியத்தை பிரித்தானியர்கள் கைப்பற்ற முடிந்தமைக்கான காரணங்கள் **மூன்றினைக்** காட்டி விளக்குக.
(06 புள்ளிகள்)

**6.** (i) கீழ்வரும் ஒளிப்படங்களில் இலங்கையை ஆட்சி செய்த பிரதமர்கள் மூவர் காண்பிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பிரதம மந்திரி பதவி வகித்த கால ஒழுங்கு முறைப்படி அவர்களின் பெயர்களை விடைத்தாளில் எழுதுக.





(03 புள்ளிகள்)

(ii) A - கி.பி. 1798-1802 வரையான காலப்பகுதியில் இலங்கையின் கரையோரப் பகுதியில் நடைபெற்ற ஆட்சி முறையின் பெயரை எழுதுக.

B - கி.பி. 1797 ஆம் ஆண்டில் இலங்கையின் கரையோரப் பிரதேசத்தில் உருவான மக்கள் போராட்டம் பற்றி ஆராய்ந்து அறிக்கை ஒன்றை முன்வைப்பதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் பெயரினை எழுதுக.

C - மலையகத்தையும் கரையோரப்பகுதியையும் ஒன்றிணைத்து இலங்கை முழுவதையும் ஐந்து மாகாணங்களாகப் பிரிக்க வேண்டுமென ஆலோசனை வழங்கிய ஆணைக்குழுவின் பெயர் யாது?

D - இலங்கையின் முதலாவது ஆளுநர் நாயகத்தின் பெயரினை எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) சுதந்திரத்தின் பின்னர் இலங்கை அரிசி உற்பத்தியில் தன்னிறைவடைதற்கு எடுத்த **இரண்டு** நடவடிக்கைகளை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) கடந்த இரண்டு தசாப்தங்களில் இலங்கையின் கல்வித்துறையில் ஏற்பட்ட புதிய போக்குகள் **மூன்றினை** விளக்குக. (06 புள்ளிகள்)

[பக் 4 ஐப் பார்க்க

## பகுதி III

**7.** (i) இந்தியாவிற்கு வருகைதந்த ஆரம்ப ஆரியர்கள் வணங்கிய தெய்வங்கள் மூன்றின் பெயர்களை எழுதுக. (03 புள்ளிகள்)

(ii) கீழே அடைப்புக்குள் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து A, B,. C, D ஆகிய வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து எழுதுக.
(கௌடில்லியர், பிம்பிசாரன், காசி, செலியுக்கஸ் நிகேட்டர், அவந்தி, மகா அலெக்செண்டர், அஜாசத், காளிதாசன்)

A - கோசல மன்னனின் சகோதரியைத் திருமணம் செய்ததன் மூலம் மகத மன்னனுக்கு சீதனமாகக் கிடைத்த ஜனபத

B - மகதத்தின் தலைநகரை ரஜகஹவிலிருந்து பாடலிபுத்திரத்துக்கு கொண்டு சென்ற அரசன்.


C - பஞ்சாப் உட்பட வடமேற்கு இந்தியாவை ஆக்கிரமித்த கிரேக்க பேரரசன்

D - மௌரியப் பேரரசின் முதலாவது ஆட்சியாளரான சந்திரகுப்த மௌரிய மன்னன் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு உதவிய பொருளியலாளர் (04 புள்ளிகள்)

(iii) மௌரியப் பேரரசின் உன்னத ஆட்சியாளராகக் கருதப்படும் அசோக மன்னன் மக்கள் விரும்பும் மன்னனாக மதிக்கப்பட்டதற்கான காரணங்கள் **இரண்டினை** விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) இந்தியாவின் கலாசார வரலாற்றில் குப்த காலம் முக்கியம் பெறுவதற்கான **இரண்டு** விடயங்களை உதாரணங்கள் மூலம் விளக்குக. (06 புள்ளிகள்)

**8.** (i) **8** ஆம் **9**ஆம் வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள உலகத் தேசப்படத்தின் ஒரு பகுதியை அவதானித்து விடை எழுதுக. இப்படத்தில் A, B, C எனக் குறிப்பிடப்பட்டுள்ள நாடுகள் குடியேற்றங்களை நிறுவுவதில் முன்னோடிகளாக இருந்த ஐரோப்பிய நாடுகளாகும். அவற்றின் பெயர்களை ஒழுங்குமுறைப்படி எழுதுக. (03 புள்ளிகள்)




(ii) D நாட்டின் ஆட்சியாளர் கப்பல் பயணங்கள் மேற்கொள்வதை ஊக்குவிப்பதற்கு செய்த பணிகள் இரண்டினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) கைத்தொழிற் புரட்சியோடு குடியேற்ற நாடுகளில் அதிகாரத்தை வலுப்படுத்துவதற்கான தேவை எழுவதில் செல்வாக்குச் செலுத்திய **இரண்டு** காரணங்களை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) கைத்தொழிற் புரட்சியின் ஒரு நன்மையான விளைவையும் ஒரு தீமையான விளைவையும் குறிப்பிட்டு அவை மனித வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தினை விவரிக்குக. (06 புள்ளிகள்)

[பக் 5 ஐப் பார்க்க


**9.** (i) மேலே தரப்பட்டுள்ள உலகப் படத்தின் ஒரு பகுதியில் முதலாம் உலகப் போரின் போது, நட்பு நாடுகளின் அணியில் இருந்த ஒரு நாடும் மத்திய ஐரோப்பிய வல்லரசில் இருந்த இரு நாடுகளும் 1, 2, 3 எனக் குறிக்கப்பட்டுள்ளன. இந்நாடுகளின் பெயர்களை ஒழுங்குமுறைப்படி எழுதுக. (03 புள்ளிகள்)

(ii) முதலாம் உலகப் போருக்குப் பின்பு தோற்றுவிக்கப்பட்ட சர்வதேச சங்கத்தின் மூலம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு ஐக்கிய அமெரிக்கா அரசுகள்உலக வல்லரசாக எழுச்சி பெறுவதற்கு பின்பற்றிய வெளிநாட்டு கொள்கைகளை **இரண்டு** விடயங்களைக் கொண்டு விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு உலக அரசியல் கோலம் மாற்றமடைந்த விதத்தை **மூன்று** விடயங்கள் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)

**10.** (i) பின்வரும் உருவில் இடம்பெறாத ஐக்கிய நாடுகள் சபையின் ஏனைய நிறுவனங்கள் **மூன்றினதும்** பெயர்களை உமது விடைத்தாளில் எழுதுக.




(ii) ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்புரிமை நாடுகள் **நான்கின்** பெயர்கள் தருக. (04 புள்ளிகள்)


(iii) மூன்றாம் உலகப் போரை நோக்கி அண்மித்த சந்தர்ப்பங்கள் பலவற்றில் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டினால் அது தவிர்க்கப்பட்ட விதத்தினை உதாரணங்கள் இரண்டினைக் கொண்டு விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) "உலகின் பலம் வாய்ந்த நாடுகளின் தேவைகளுக்கு ஏற்ப செயற்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை மீது குற்றம் சுமத்தப்படுகிறது." இதற்கு சார்பாகவும் எதிராகவும் கருத்துக்களை முன்வைக்குக. (06 புள்ளிகள்)

* * *

## கல்விப் பொதுத் தராதப் பத்திர (சாதராரண தரம்)
## உதவிக் கருத்தரங்கு - 2013

1) அ (i)



1) அ (ii)

## கல்விப் பொதுத் தராதப் பத்திர (சாதாரண தரம்) - 2012
## உதவிக் கருத்தரங்கு - 2012

